# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி -11 | 28-08-2003 | வியாழக்கிழமை | ஓசை 191



T.P: 024-22318

NELSON LEARNERS

(Government Approved "A" Grade Driving School)
Reg No :D.S.242

சிறிய வாகனம் முதல் பெரிய வாகனம் வரை பயிற்சிகொடுத்து லைசன்ஸ் கொடுக்கப்படும்.

கிளை: வவுனியா. யாழ்ப்பாணம்.

No:86. Bus Stand Complex Vavuniya.

(தி8248)


## பாரிஸில் தயாரிக்கப்பட்ட இ.நி.கட்டமைப்பு யோசனைகள்

# தமிழர் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும்;

# தலைவர் பரிசீலனையின் பின் சமர்ப்பிக்கப்படும்!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(பாரிஸ்)

**விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் பாரிஸ் நகரில் தயாரித்திருக்கும் இடைக்கால கட்டமைப்புக்கான யோசனைகள் ஈழத்தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் என்றும் தேசியத் தலைவரின் பரிசீலனையின் பின் நோர்வே ஊடாக சிறிலங்கா அரசாங்கத்திடம் இது கையளிக்கப்படும் என்று சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**

இச்செய்தியாளர் மாநாட்டில் மேற்கு நாட்டுச் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த சு.ப.தமிழ்ச செல்வன் அவர்கள்,

ஈழத் தமிழ் மக்களின் நெருக்கடியின் உண்மையையும் யதார்த்தத்தையும் வெளிப்படுத்தி அதன் மூலம் தீர்வு காண்பதே விடுதலைப் புலிகளின் நோக்கம் என்றும் அவர் கூறினார். விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினரது பாரிஸ் நகர கருத்தாய்வுக் கூட்டத்தின் இறுதி நாளான நேற்று (செவ்வாய்க் கிழமை) மாலை, செய்தியாளர்களைச் சந்தித்த தமிழ்ச்செல்வன் இடைக் கால கட்டமைப்பு தொடர்பாக இன்றைய அமர்வில் தயாரித்து தொகுக்கப்பட்ட விதப்புரைகளுடன் தமது குழு வன்னி செல்கிறது என்றும் புதிய விதப்புரைகள் பற்றிய விபரங்களைத் தற்போது வெளியிட முடியாது என்றும் கூறினார். நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக் சூல்ஹெய்ம் அவர்களையும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் கிழக்கு மாகாண சிறப்புத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் அமைந்தால் நாடு பல சிக்கலை எதிர்நோக்கும்

### தேசிய பிக்குமார் முன்னணி எச்சரிக்கை

வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுமானால் நாடு மேலும் பல சிக்கல்களை எதிர் நோக்க வேண்டிவரும் என்று தேசிய பிக்குமார் முன்னணி தெரிவித்துள்ளது.

தற்போதைய சமாதான நடவடிக்கையினால் நாடு இக்கட்டான நிலையை. எதிர்நோக்கியுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சிறந்த எதிர்காலம் ஒன்றை ஏற்படுத்துவதே பௌத்த பிக்குகளின் தலையாய கடமை என்று தேசிய பிக்கு முன்னணி தெரிவித்துள்ளது.

## இடைக்கால நிர்வாகசபை குறித்து இந்.அரசுடன் கலந்துரையாடல்

### - சிறி.அமைச்சர் திசஅத்துநாயக்க

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிற்கான உத்தேச இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக இந்திய அரசுடன் இலங்கை அரசாங்கம் கலந்துரையாடவுள்ளதாக சிறிலங்காவின் அமைச்சர் திச அத்துநாயக்க தெரிவித்துள்ளார். இலங்கையின் அயல்நாடான இந்தியாவை ஒதுக்கிவிட்டு இலங்கைப் பிரச்சினைக்கு எந்த ஒரு தீர்வையும் எடுப்பதற்கு முயற்சி எடுக்கப் படமாட்டாதென்று, இந்தியாவுடன் தற்பொழுது இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் இலங்கைத் தீவில் யுத்தம் நீங்கி

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாரிஸ்கூட்டத்தில் கனேடியக்குழு கூட்டாட்சி பற்றி பரிந்துரை வழங்கியது

கனடா ஒன்ராறியோ மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சர் பொப்றே அவர்கள் தலைமையிலான குழு விடுதலைப்புலிகளின் நேற்றைய பாரிஸ் நகரக் கருத்தாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கூட்டாட்சி அமைப்பு தொடர்பான பரிந்துரைகளை வழங்கியது. கனேடியக் குழு விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவுக்கு வழங்கிய பரிந்துரைகள் இலங்கைக்கு பொருத்தமான ஒரு கூட்டாட்சி வடிவத்தை கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

கனேடியக்குழுவில் பொப்றேயுடன் கனடாவின் கூட்டாட்சி மன்றத்தைச் சேர்ந்த பேராசிரியர் கமானும் இடம்பெற்றிருந்தார்.

## வடக்குகிழக்கைப் பிரிக்கக் கோரி அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனித் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும், விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்படக்கூடாது ஆகிய இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று அம்பாறை மாவட்டத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது. கிழக்கைப் பாதுகாக்கும் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பௌத்த பிக்குமார்கள், அரசியல்வாதிகள் சிறிய தொகை

(08ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை உயரும்

எரிபொருளுக்கு உலக சந்தையில் ஏற்பட்ட விலை உயர்வினால் உள்நாட்டில் எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளதாக சிறிலங்காவின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் கூறியுள்ளார். ஈராக் யுத்தமே இந்த விலை உயர்விற்குக் காரணம் என்றும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அகதிமுகாம் மக்கள் குடியமர இடமின்றி அவதி

### மல்லாகம் நீதிமன்ற நீதவான் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் அகதிமுகாமைச் சேர்ந்த மக்கள் குடியமர இடமின்மையால் மிகவும் அவதிப்படுவதாக மல்லாகம் நீதிமன்ற நீதவான் தெரிவித்துள்ளார். தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் இருக்கும் மேற்படி முகாமில் 46 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மயிலிட்டி மற்றும் பலாலிப் பகுதிகளில் தமது சொந்த வீடுகளைக் கொண்ட இவர்கள் இராணுவ ஆக்கிரமிப்பால் பல இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்து இந்த நலன்புரி முகாமில் தற்பொழுது வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் வாழ்ந்துவரும் இந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் வீதி விபத்து

புதுக்குடியிருப்பு பகுதியில் ஏற்பட்ட வாகனவிபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 6.45 மணிக்கு புதுக்குடியிருப்பு பரந்தன் சாலையில் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் இடம்பெற்றது. எல்ப் ரக வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியில் இரு பார ஊர்திகள் நேருக்குநேர் மோதின

### - ஓட்டுனர் ஒருவர் மயக்க நிலையில்

ஏ-9 வீதியில் நேற்று பாரவூர்திகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஓட்டுனர் ஒருவர் மயக்க நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பழைய முறிகண்டிப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பாரவூர்தியும் தனியாருக்கு சொந்தமான பாரவூர்தியுமே மோதிக் கொண்டன. இதன்போது பாரவூர்திகள் சிறுசேதத்திற்குள்ளானது.

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்று மட்டக்களப்பிற்கு விஜயம்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் இன்று மட்டக்களப்புக்குப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார். இராணுவ மற்றும் விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளையும் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் தலைவர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். பல்வேறு சமூகங்களுக்கு இடையில் எவ்வாறு ஐக்கியத்தை ஊக்குவிப்பது என்பது பற்றி இவரது பேச்சுக்கள் மையம் கொண்டிருக்கும். இவர் கடந்த வாரம் திருகோணமலைக்குச் சென்று விடுதலைப்புலிகள் பாதுகாப்புப்படைகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இவர் மாவட்ட கண்காணிப்புக் குழுவினரையும் சந்தித்து பேச்சு

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுப்பது பற்றி ஆராய்ந்து வருகிறாராம் சனாதிபதி சந்திரிகா

படைத்துறை அமைச்சை பொறுப்பேற்பது குறித்து பரிசீலனை செய்துவருவதாக சிறிலங்கா சனாதிபதி தேசிய சங்க சம்மேளனத்திடம் தெரிவித்துள்ளார். படைத்துறை அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்க வேண்டும் என்று சம்மேளனம் சனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கு பதில் அளித்துப் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் பெருமளவு ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்துள்ளதாகவும் வன்னியில் ஆயுதப்பயிற்சிகள் இடம்பெறுவதாகவும் இந்த சம்மேளனம் சனாதிபதிக்குத் தெரிவித்துள்ளது. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் எனவே இது குறித்து சனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர் பிரச்சினை சர்வதேச சமூகம்முன் கொண்டுவரப்பட வேண்டும்

### அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் வலியுறுத்து

வடக்கு-கிழக்கில் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைகள் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம்கொடுக்க வேண்டும் என்று அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோர் தொடர்பாக சங்கத்தின் உபதலைவர் க. விஜயகுமார், அரசியல்துறை துணைப் பொறுப்பாளரை நேற்று மாலை கிளிநொச்சியில் சந்தித்து காணாமல் போனோர் தொடர்பாக கடந்த காலங்களில்

(08ஆம் பக்கம் பார்க்க)

# உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்குக் கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல .1846-SRI(SF)

# கேள்வி அறிவித்தல்-07

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின்(**NECORD**) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் (**NECORD**) கருத்திட்டக் கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொ. இல | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப்பணம்(ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD/HS/10 | உருத்திரபுரம் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை கட்டட மீள்நிர்மாணம். | M8 | 20000.00 |
| 02 | KN/NECORD/HS/11 | பூநகரி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை கட்டட மீள்நிர்மாணம். | M8 | 20000.00 |
| 03 | KN/NECORD/HS/12 | பளை சித்த ஆயுர்வேத வைத்தியசாலை கட்டட மீள் நிர்மாணம். | M8 | 20000.00 |
| 04 | KN/NECORD/IR/02 | இரணைமடுவில் நீர்ப்பாசன விடுதி திருத்தியமைத்தல். | M9 | 7000.00 |
| 05 | KN/NECORD/AG/05 | பூநகரி கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம். | M7 | 46000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (**ICTAD**) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்ததுஇரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் 2003 யூலை 1ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவுசெய்த கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாக, அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக செய்திருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் /அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும்முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

III இக்காட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியகேள்விகோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

VI மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

V கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

**04.** மேற்படி பந்தி 2ல் குறிப்பிட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம்.ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும். அல்லது 2003 யூலை 1ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவுசெய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாக, அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக செய்திருந்தால் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் ஒரு நேரத்தில் ஆகக்கூடுதலாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

**05.** ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்) மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்ட பிரதிதிட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**06.** கேள்வி ஆவணங்களை 2003 ஒகஸ்த்து 28ஆம் திகதியிலிருந்து செப்ரெம்பர் 8ஆம் திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாதகட்டணம் ரூபா 1000த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

**07.** கேள்வி கோருபவருக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம்II குறிந்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**08.** அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி. என்ற முகவரிக்கு 2003 செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

**09.** *கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று செப்ரெம்பர் 03ஆம் திகதி அன்று முற்பகல் 10.30மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.*

**10.** கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**தி.இராசநாயகம்**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-8474)

# படைகளை மீளப்பெறும் திட்டம் எதுவுமில்லை; துணிகரத் தாக்குதலுக்கு அது வழிவகுக்கும்!

## ஈராக் குறித்து சனாதிபதி புஷ் அபிப்பிராயம்

**ஈராக்கிலிருந்து அமெரிக்க தலைமையிலான பல்தேசியப் படைகள் வாபஸ் பெறப்படமாட்டாது என்று அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் ஓய்வுபெற்ற இராணுவத்தினர் மத்தியில் அவர் உரை நிகழ்த்தும் போது இந்தக் கால கட்டத்தில் அமெரிக்கா, ஈராக்கை விட்டு வெளியேறுமானால் மேலும் துணிகரமான தாக்குதல்களுக்கு அது வழிவகுக்கும் என்று கூறியுள்ளார்.

ஈராக்கில் நேற்று முன்தினம் இரண்டு அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மே மாதம் முதலாம் திகதியிலிருந்து ஈராக்கில் இறந்த அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை 140 ஆக அதிகரித்துள்ளது.

மே மாதம் முதலாம் திகதி அமெரிக்க சனாதிபதி கருத்து வெளியிடுகையில் ஈராக்கில் தாக்குதல்கள் முடிவுக்கு வந்துள்ளன என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிகழ்வில் குடியரசுக் கட்சி செனட் சபை உறுப்பினர் உரையாற்றும்போது, ஈராக்கியப் பிரச்சினை உடனடியாக முடிவுக்கு வந்துவிடமாட்டாது என்று குறிப்பிட்டார். பல ஆயிரம் கோடி டொலர்கள் செலவிடப்பட வேண்டியிருக்கும் என்றும், ஆயிரக்கணக்கான அமெரிக்க வீரர்கள் தங்களது உயிர்களைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனநாயகக் கட்சி செனட் சபை உறுப்பினர் உரையாற்றும்போது ஈராக்கில் அமெரிக்க வீரர்கள் தங்களது நிலைப்பாட்டை திறமையாக மேற்கொள்ளாத படியால் பயங்கரவாதம் உற்பத்தியாகும் இடமாக அது மாறிவிட்டது என்று தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தும் பின்னடைவை எதிர் நோக்கக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



வடகொரிய அணுவாயுதப்பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்த நேற்று பெயஜிங்கில் கூடிய ஆறு நாடுகளின் இராஜதந்திரிகள் இடமிருந்து வலமாக மிட்டோஜி யபுனாகா (ஜப்பான்), ஜேம்ஸ் கெல்லி (அமெரிக்கா), கிம்யங் இல் (வடகொரியா), வாங்யி (சீனா), அலெக்ஸாண்டர் லுசியகொவ் (ரஷ்யா), லீ சூஹொக் (தென்கொரியா) ஆகியோர் காணப்படுகின்றனர்.

## 28,000 பேருக்கு பொலிஸ் பயிற்சி

28.ஆயிரம் ஈராக்கியர்களுக்கு அமெரிக்காஹங்கோயில் வைத்து பொலிஸ் பயிற்சி வழங்க திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே 37 ஆயிரம் பேர் ஈராக்கிய பொலிஸ் படையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



புவிக்கு மிக அண்மையில் வந்த செவ்வாய்க் கிரகத்தை தொலை நோக்கி மூலம் காணுவதற்கு நேற்று திரண்ட லொஸ் ஏஞ்சல் நகர வாசிகள்.

# அமெரிக்கா தேவையற்ற வகையில் எமது விவகாரங்களில் தலையிடுகிறது

## பலஸ்தீன சனாதிபதி அரபாத் ஆட்சேபம்

பலஸ்தீன விவகாரத்தில் தேவையற்ற விதத்தில் அமெரிக்கா தலையிட்டு வருவதாக பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத் குற்றம் சாட்டியுள்ளார்.

பலஸ்தீனத்துக்கான தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஒருவரை யசீர் அரபாத் நியமித்தது தொடர்பாக அமெரிக்க வெள்ளை மாளிகை கருத்து வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக யசீர் அரபாத் கருத்துக் கூறும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்தின் பலம் பொருந்திய ஒரு நபராகக் கருதப்படும் அல்ரஜூப் பலஸ்தீனத்தின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப் பட்டதால் பலஸ்தீனப் பாதுகாப்புப் படையினரை ஒன்றிணைத்து அமெரிக்காவின் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பிரதமர் மகமூத் அபாஸின் முயற்சிகள் பாதிக்கப்படும் என்று அமெரிக்கா கருத்து வெளியிட்டிருந்தது.

இதனை மறுத்து கருத்து வெளியிட்ட யசீர் அரபாத் பலஸ்தீனத்தின் உள்நாட்டு விவகாரத்தில் எந்த ஒரு வெளிச் சக்தியையும் தலையிட தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும், இஸ்ரேலின் உள்விவகாரங்களில் இப்படி யாரும் தலையிட முடியுமா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்க அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துள்ள பலஸ்தீனப் பிரதமர் அபாஸ் அமெரிக்காவின் கோரிக்கைக்கு அமைவாக பலஸ்தீனப் போராளிகளின் ஆயுதங்களைக் களைய முனையக்கூடும் என்ற எதிர்பார்ப்பிலேயே படையினரைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர சனாதிபதி யசீர் அரபாத் முயற்சி செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஜேர்மனியில் வெப்ப அதிகரிப்பால் வீடுகளை விட்டு மக்கள்வெளியேற்றம்

(போனின்)

ஜேர்மனியில் கடும் வெப்பம் நிலவுவதால், அந்நாட்டு மக்கள் தமது ஊர்களைவிட்டு வெளியேறி கோடை வாசஸ் தலங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

ஜேர்மனியில் முன்பு எப்போதுமில்லாதவாறு வெப்பம் கூடுதலாக காணப்படுவதால், அங்குள்ள செல்லப்பிராணிகளுக்குக் கூட கலர் கண்ணாடிகள் அணிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியிலுள்ள நிறுவனமொன்று செல்லப்பிராணிகள் அணியக்கூடிய பிரத்தியேகமாக கண்ணாடிகளை நீலம், மஞ்சள், கறுப்பு என்று பல்வேறு நிறங்களில் தயாரித்து விற்பனை செய்கின்றது.

இக்கண்ணாடிகள் வெயிலிலிருந்தும் கண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்பதால் ஏராளமானவர்கள் இந்தக் கண்ணாடிகளை வாங்கி தமது செல்லப்பிராணிகளுக்கு அணிவித்துள்ளார்கள்.

# வேலை நிறுத்தம் செய்தோருக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது

## தமிழக அரசு அறிவிப்பு

(சென்னை)

அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் செய்த 24 நாட்களுக்கான வேதனம் வழங்கப்படமாட்டாது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் பணியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும், 24 ஆம் திகதி வரை வேலை நிறுத்தம் நடைபெற்றதால் அந்த நாட்களுக்கு வேதனம் வழங்கப்படமாட்டாது என்று தமிழக அரசு கூறியுள்ளது.

இந்த நாட்கள் வேதனமில்லாத விடுமுறை நாட்களாகக் கருதப்படும் என்றும் கூறியுள்ளது.இதனிடையே பணிநீக்கம், தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட 6072 அரச ஊழியர்களுக்கு நோட்டீஸ் அனுப்புவதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

# உத்தரப்பிரதேச ஆளுநரின் செயலுக்கு கட்சிகள் கண்டனம்

## முலாயம்சிங் ஆட்சியமைக்க முயற்சி

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தில் அரசமைக்க ஆதரவு வழங்கும் உறுப்பினர்களின் பட்டியலை வழங்குமாறு சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதேவ்விடம் ஆளுநர் கேட்டுள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் புதிய அரசு அமைக்க முயன்று வரும் சமாஜ்வாதி கட்சித்தலைவர் முலாயம்சிங் தம்மை ஆதரிக்கும் உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என்று மாநில ஆளுநர் கூறியிருப்பதை எதிர்க்கட்சிகள் ஆட்சேபித்துள்ளன.

மாற்று அரசு அமைக்கும் கட்சி சட்டசபையில் தான் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமே தவிர, ஆளுநரிடம் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லையென முலாயம்சிங் மறுத்துள்ளார்.

ராஷ்ட்ரிய லோக்தள கட்சித் தலைவர் அஜித்சிங், ராஷ்ட்ரிய காந்தி கட்சித் தலைவர் கல்யாணசிங் ஆகியோரும் முலாயம் சிங்கின் கருத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.காங்கிரஸ் தலைவர்கள் ஆளுநரைச் சந்தித்து சமாஜ்வாதி கட்சி ஆட்சியமைக்க ஆதரவு வழங்குவதாக நேற்று கூறியுள்ளனர்.



பாங்கொக்கில் வெளிநாட்டவர் வந்து தொழில் புரிவதை எதிர்த்து தாய்லாந்துப் பிரதமரின் வாசஸ்தலத்தின் முன்னால் ஊர்வலமாகச் செல்லும் மக்கள்.

# மனிதாபிமான பணியாளர் மீதான தாக்குதலை போர்க் குற்றமாக ஐ. நா. ஏகமனதாக ஏற்பு!

அமைதிப் பணி மற்றும் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அவர்களுக்கெதிரான குற்றங்களுக்குத் தண்டனை வழங்கவும் வகை செய்யும் தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஒருமனதாக நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தகைய ஊழியர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைப் போர்க் குற்றங்களாகக் கருதி விசாரணை நடத்த இந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

மனிதாபிமான மற்றும் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பேசுகையில் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வாரம் பாக்தாத்தில் ஐ.நா. அலுவலகத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிக் கூறுகையில் அவர், தன்னார்வத் தொண்டுப் பணியில் ஈடுபட்டிருக்கும் பொதுநல ஊழியர்களை குறிவைத்துத் தாக்கும் தீவிரவாதிகளை ஒடுக்க இந்தத் தீர்மானம் உதவும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது பிரச்சார உத்தியா.....?



வாஜ்பாய்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள வடமாநிலத் தேர்தலை முன்னிட்டு இந்திய அரசியல் களைகட்டத் தொடங்கியுள்ளது. இதன் பிரதிபலிப்புக்கள் மக்களவையிலும் எதிரொலித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாகவே மக்களவையும் கூச்சல், குழப்பம், வெளிநடப்புக்கள் என்பவற்றால் அல்லோலப்பட்டது.

அண்மையில் ஆளும் தேசிய சனநாயக முன்னணிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டதும் இதனை முன்விட்டுத் தான். ஆனால், இதில் பாரதீய ஜனதாக் கட்சி வென்றுவிட்டதாகக் கூறப்படுவது பெரிய புதுமையல்ல. எதிர்பார்க்கப்பட்ட சாதாரண விடயம்தான்.

ஏனெனில், 24 கட்சிகளைக் கொண்ட தேசிய சனநாயக முன்னணியில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி 323 ஆசனங்களை தன்னகத்தே வைத்துள்ளபோது, தோல்வி என்பது அத்திபூத்தால் போல்தான். அதை மெய்யாக்குவதுபோலவே நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் 312 வாக்குகளையும் பெற்றுள்ளது.

மறுபுறம் காங்கிரஸ் தான் எதிர்பார்த்த ஊகங்களை சரியா... பிழையா... என நாடி பிடித்துப் பார்க்க இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உதவியுள்ளது எனலாம். எதிர்வரும் மாநிலத் தேர்தல், அதையடுத்து பாராளுமன்றத் தேர்தல் என்பனவற்றில் தன்னுடன் யார் யார் கூட்டுச் சேர்வார்கள், யார் வெட்டிக் கொள்ளவுள்ளார்கள் என்பதை ஓரளவேனும் தெரிந்து கொண்டிருக்கும் என்பதே உண்மை நிலை.

மக்களவையை எதிர்க்கட்சிகள் பல நாட்

**அ. கலைவாணி**

களாக நடத்தவிடாது தொடர்ந்து கூச்சல், குழப்பம், வெளிநடப்பு என்று புறக்கணித்து வந்தன. இதைத் தொடர்ந்து ஆளும் மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் கொண்டு வந்தன.

1999இல் கார்கில் போரின்போது ஆயுதங்கள், சவப்பெட்டிகள் வாங்குவதற்கென்று 30 வீதம் ஒதுக்கப்பட்ட நிதியில் 24 கோடி ரூபா செலவழிக்கப்படவில்லை. மக்கள் கார்கில் வரியாகச் செலுத்திய 4.253 கோடி ரூபாவும் செலவழிக்கப்படவில்லை. இது பாதுகாப்பு அமைச்சர் ஜார்ச் பெர்னாண்டஸ் மீதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு.

அதேபோல் வாஜ்பாய் அரசுதான் மதசார்பற்ற நாடாக இருந்த இந்தியாவை மதவெறி கொண்ட நாடாக மாற்றிவிட்டார் என்பன உட்பட 09 குற்றச்சாட்டுக்களை சல்லடைபோட்டு சலித்துள்ளன.

இவ்வாறு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்தவர்களில் காங்கிரஸில் இருந்து பிரிந்துபோய் கட்சியமைத்துக் கொண்ட சரத் பவார் (தேசியவாத காங்கிரஸ்), முலாயம்சிங் யாதேவ் (சமாஜ்வாதி) முக்கியமானவர்கள்.

இவர்கள் முன்பு காங்கிரஸை எதிர்த்தது போலவே பாரதீய ஜனதாவையும் ஆதரிக்க விருப்பமில்லாதவர்கள்தான.

ஆனால், தற்போது பாரதீய ஜனதாவை எதிர்ப்பதில் காங்கிரஸ"டன் இணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்துள்ளார்கள்.

எனவே இவர்கள் எதிர்காலத்தில காங்கிரஸ"டன் கூட்டுச்சேரவும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கலாம்.

இதற்கு, அண்மையில் 'சோனியாகாந்தி இத்தாலி நாட்டவர் என்பது இப்போது பெரிய விடயமல்ல' என்று முலாயம்சிங் யாதேவ் பேட்டியில் கூறியிருப்பது சான்றாகக் கூட அமையலாம்.

இதே முலாயம்சிங் யாதேவ் தான் முன்பு சோனியா இத்தாலி நாட்டவர் என்று கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர். அவரேதான் தற்போது இப்படியும் கூறுகின்றார். எனவே இது காங்கிரஸ் கூட்டுக்கு வழியாகக் கூட அமையலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

எனவே காங்கிரஸ் தலைவி எதிர்பார்த்த ஊகங்களில் இதுவும் ஒன்றாகக்கூட இருக்கலாம். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடி பிடித்துப் பார்த்ததன் மூலம் அவர் வாக்கெடுப்பில் தோல்வியடைந்திருந்தாலும், அவர் நினைத்த, எதிர்பார்த்த ஊகங்கள் உண்மைத் தன்மைக்கு கட்டாயம் அத்திவாரம் இட்டிருக்குமானால் அவர் வெற்றி பெற்றுள்ளார் என்றே கூற முடியும். சோனியா காந்தியின் ஹிந்தி புலமையும் நன்றாக வெளிப்பட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

மறுபுறம், தி.மு.க.வும், பாரதீய ஜனதாவும் ஓடும் புளியம் பழமும் போன்றுதான் இதுவரை இருந்து வந்தது. எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கருணாநிதியும் ஆதரிப்பார் என்று காங்கிரஸ் நம்பியிருக்கலாம். உண்மையில் எல்லோரும் அப்படித்தான் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், தி.மு.க.வோ முடிவு எடுக்க வில்லை என்று கூறிக் கொண்டிருந்த போதும், கடைசி நேரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்ப்பதாக பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு வழங்கிவிட்டது.

இதற்குக் காரணம் இல்லாமலில்லை. ஒன்று நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள தி.மு.க.விடம் ஆதரவு கேட்போமே எனும் ஜார்ச் பெர்னாண்டஸின் இறுகம். இரண்டு வெற்றிபெற வாக்குகள் அதிகரிக்குமே எனும் பாரதீய ஜனதாவின் அரசியல் தந்திரம். அதாவது, நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்குமாறு தி.மு. கட்சியிடம் கேட்பதில் குறைந்துவிடவா போகின்றோம் எனும் நம்பிக்கையாகக் கூட இருக்க முடியும்.

மறுபுறம் தி.மு.கட்சி ஆதரவு வழங்குவதன் மூலம் பாரதீய ஜனதா மீது தமக்குள்ள கசப்புகள் அனைத்தையும் கொட்டித் தீர்க்க இது நல்ல வாய்ப்பு என்பதுபோல ஆதரவையும் வழங்கி, மக்களவையில் கசப்பையும் அள்ளி வீசிவிட்டது.

2001இல் அ.தி.மு.க. தமிழக ஆட்சியைக் கைப்பற்றியதுடன் நின்று விடாது, இன்று வரை அது நடந்து கொள்ளும் முறைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கவையல்ல. அத்துடன் பொடோ சட்டம், ஊழியர்கள் பிரச்சினை, அரசியல் தலைவர்கள் மீது டெஸ்மா சட்ட வழக்கு என்று தொடரும் அ.தி.மு. கட்சியின் நடவடிக்கைகள் இவற்றைத் தட்டிக்கேட்காமல் மத்திய அரசு கண்மூடி வாய் பொத்தி இருப்பது போல நடந்து கொள்வதாகவும் மத்திய அமைச்சர் ரி.ஆர். பாலு கோபம் வெளியிட்டார்.

அத்துடன் நின்றுவிடவில்லை. ரி.ஆர். பாலு 1998இல் வாஜ்பாய் பிரதமராகிய 13 நாட்களில், அ.தி.மு.கட்சியின் ஒரு வாக்கு வித்தியாசத்தினால் தான் பதவி கவிழ்க்கப்பட்டார். அப்படியான கட்சியின் செயற்பாடுகளையா தட்டிக்கொடுப்பது என்று எதிர் கேள்வியும் கேட்டுள்ளார்.

அந்தக் காலப் பகுதியில் வலிய சென்று பாரதீய ஜனதாவை ஆதரித்தது தி. மு. கட்சி மட்டும்தான். 1998இல் தூசெனத் தட்டிச் சென்றுவிட்ட அ.தி.மு.கட்சியைதான் மத்திய அரசு பாராட்டிக் கொடுப்பதுபோல் நடந்து கொள்கின்றது என்று குறைபட்டும் கொண்டுள்ளார்.

எனவே, தி.மு. கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை முழுமனதாக எதிர்க்கவில்லை. ஏதோ ஆதரவு கேட்டுவிட்டார்கள் மறுக்க முடியாது என்பது போன்றுதான் ஆதரவை வழங்கியுள்ளது போல் தெரிகின்றது.

அது மட்டுமன்றி, பாரதீய ஜனதாவுக்கும் தி.மு.க.வுக்குமிடையேயுள்ள இடைவெளி அதிகரிப்பு இந்த விதத்தில்கூட குறைந்து போகவில்லை. மாறாக அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள்தான் அதிகமாகவுள்ளது போலுள்ளது.

மறுபுறம், அ.தி.மு.க. பாரதீய ஜனதாவுடன் நெருங்கி வருவதாக பல விடயங்களில் காட்டிக் கொண்டது. அயோத்தில் ராமர் கோயில் கட்டுவது அதில் முக்கியமானது.

ஆனால், நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நடுவு நிலைமையில் இருந்துவிட்டது. கேட்டால் மட்டுமே மத்தியரசுக்கு எமது ஆதரவு. வலிய சென்று ஆதரவு வழங்கமாட்டோம் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா தூர நின்று நடப்பதைப் புதினம் பார்ப்பது போல் தான் செயற்பட்டார்.

ஆனால், இதை மட்டும் வைத்துக் கொண்டு அ.தி.மு.க. பாரதீய ஜனதாவுடன் நெருக்கம் பாராட்டாது என்று கூறிவிட முடியாது.




சோனியா

சரத்பவார்

அதேநேரம், அண்மையில், 19 மாநில முதலமைச்சர்களுக்கான கருத்துக் கணிப்பு ஒன்றை இந்தியா ருடே நடத்தி இருந்தது. அதில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பத்தொன்பதாவது இடத்தில்தான். அதாவது கடைசி நிலையில்தான் உள்ளார்.

எனவே, அ.தி.மு.க. யாருடனாவது கூட்டு சேர்ந்துதான் எதிர்காலத்தில் தேர்தல்களைச் சந்திக்க முடியும் என்றும் எதிர்பார்க்கலாம்.

அடுத்த நவம்பர் மாதம் வடமாநிலங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது. இங்கு காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெறுகின்றது. ஆனால், பாரதீய ஜனதா வடமாநிலங்களைக் கைப்பற்றும் நோக்கில் தான், மத்திய பிரதேசத்தில் பசுவதைச் சட்டம், டில்லியை முழு மாநிலமாக்கல், ராஜஸ்தானில் உயர் சாதியினரிடையே வேலை வாய்ப்பு ஒதுக் கீடு போன்ற பிரேரணைகளை கையிலெடுத்துக் கொண்டுள்ளது.



கருணாநிதி

இதேநேரம், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி வடமாநிலங்களை கோட்டை விடுவாரானால், அவரது மகள் பிரியங்கா அரசியலுக்குள் குதிப்பார் என்றும் நம்பப்படுகின்றது.

மறுபுறம் மேனகா காந்தியின் மகன் வருண் துணைப் பிரதமர் அத்வானி இருவரும் சந்தித்துள்ளதாகவும், தற்போது தாயார் சோனியா காந்திக்கு பக்கபலமாக பிரச்சாரத்தில் பிரியங்கா ஈடுபடுவதால், பிரியங்கா வுக்கு எதிரான பிரச்சாரத்தில் மேனகா காந்தியின் மகன் வருண் ஈடுபடலாம்.

அதாவது, பாரதீய ஜனதாவின் அரசியல் தந்திரமாக வருண் களமிறக்கப்படலாம் என்றும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அது மட்டுமன்றி நம்பிக்கையில்லாப் பிரேரணையும் சோனியா காந்தியின் பிரச்சாரம் தான் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

இன்றைய நிலையில், உத்தரப் பிரதேச முதலமைச்சர் மாயாவதி பதவி விலகியுள்ள நிலையில் சமாஜ் கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதேவ் ஆட்சியமைக்க ஆளுநரிடம் கோரியுள்ளார். காங்கிரஸ் தலைவர்கள் ஆதரவு வழங்குவதாகக் கூறியுள்ளார்கள்.

எனவே சமாஜ் கட்சி ஆட்சியமைத்துக் கொள்ளுமானால் பாரதீய ஜனதா தமது வசமிருந்த உத்தரப் பிரதேச மாநிலத்தை இழக்க நேரிடும்.

மறுபுறம் முலாயம் சிங் ஆட்சியமைக்காது போனாலும் காங்கிரஸ் - சமாஜ் கட்சி கூட்டு தொடரும் என்று எதிர்பார்க்கலாம். எதுவாயினும் காங்கிரஸ"க்கு இலாபமே.

எனவே, எதிர்காலம் பிரதமர் வாஜ்பாயா...? - சோனியா காந்தியா...? என்பதை வடமாநிலங்களில் நவம்பரில் நடைபெறப்போகும் சட்டசபைத் தேர்தல்களே எதிர்வு கூறுபவையாக இருக்கலாம். □

# வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபர் பரிதாப மரணம்!

(உடையார்கட்டு)

பரந்தன் - முல்லைவீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த சனியன்று காலை இடம்பெற்றது.

உடையார்கட்டு இருட்டுமடுவைச் சேர்ந்த வெள்ளை.ஆண்டி என்ற வயோதிபர் படுகாயமுற்ற நிலையில் தருமபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை மரணமானார்.

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றையொன்று முந்திச்செல்ல வேகமாக ஓட்டுநர்களால் செலுத்திச் செல்லப்பட்ட வேளை, தேராவில் குளத்திற்கும் துயிலும் இல்லத்திற்கும் இடையில் இந்த விபத்து நேரிட்டது என தெரியவருகிறது. (19)

# வன்னிவிளாங்குளம் பகுதியில் உழவு இயந்திரம் தடம் புரண்டது

(மல்லாவி)

மல்லாவியில் இருந்து மாங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று வன்னிவிளாங்குளம் பகுதியில் தடம்புரண்டதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த திங்களன்று காலை 6.40 மணிக்கு மல்லாவியில் இருந்து மாங்குளம் நோக்கி வந்துகொண்டிருந்த உழவு இயந்திரம் எதிரே வந்த ஹைஏஸ் வாகனம் ஒன்றிற்கு வழிவிட முற்பட்டபோது பள்ளத்தில் உழவு இயந்திரம் குடை சாய்ந்ததோடு அதில் பயணம் செய்த இருவரும் காயமடைந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# குடாநாட்டு மக்களின் கைக்கெட்டாத நிவாரணக் கொடுப்பனவுகள்!

யாழ்குடாநாட்டு மக்கள் கொடுப்பனவுகள் மற்றும் உதவிகளைப் பெறுவதில் தடையாக இருப்பவர்கள் யார் என்பதையிட்டு மக்களிடையே பல்வேறு குழப்பங்களும் காணப்படுகின்றது.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வைத் தொடர்ந்து மீளக் குடியேறிய மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

ஆனால் இக் கொடுப்பனவு கூட மீளக் குடியேறிய மக்கள் அனைவருக்கும் கிடைக்கவில்லை? அல்லது வழங்கப்படவில்லை? 1999 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு புனர்வாழ்வு அமைச்சு இதற்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்யவில்லை.

இதேநேரம் 2000 ஆம் ஆண்டில் யாழ்குடாநாட்டில் மீண்டும் ஒரு இடப்பெயர்விற்கு தென்மராட்சி மக்களும் மற்றும் அரியாலை,நல்லூர், திருநெல்வேலியில் (ஒரு பகுதி மக்களும்) கொழும்புத்துறை ஆகிய பகுதி மக்களும் உள்ளாகினார்கள்.

இதனைச் சாட்டாக வைத்து அன்றைய புனர்வாழ்வு அமைச்சர் தனது ஆட்சிக்கு வாக்குத் தேடும் நோக்கில் தனது கட்சி ஆதரவாளர்கள் மூலம் 2 ஆயிரம் ரூபா குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் வழங்கினார்கள்.

தற்போது அரசு புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்பு இக்கொடுப்பனவு விடயம் சொல்ல முடியாத அளவுக்கு பல்வேறு காரணங்களைக் காட்டியும், இழுத்தடித்துச் செல்லப்படுகின்றமை வேடிக்கையான விடயமாகும்.

22-02-2002 ஆம் திகதியின் பின் ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக் குடியேறிய மக்களுக்கு உடனடியாக நிவாரணப் பொருட்களும் மற்றும் 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் அனைவருக்கும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று காணி உள்ளவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் காணி இல்லாதவர்களுக்கு 8 ஆயிரம் ரூபாவும் சில நாட்களில் கிராம அலுவலர்களின் சிபார்சுடன் வழங்கப்பட்டன.

பின்னர் இத்தொகை 25,000 ரூபாவாக வழங்கப்படும். இதில் கிராம அலுவலர்களுக்கு எந்த வகையான தொடர்பும் இல்லை. உறுதிச் சிட்டைகளை நிரப்பி அனுப்பி வைத்தால் போதும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் யாழ்குடாநாட்டில் நிலவும் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் பற்றாக் குறையைச் சாட்டாக வைத்து ஒய்வு பெற்ற ஒரு குழுவினர் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களாக மீள் நியமனம் செய்யப்பட்டனர்.

இதேபோன்று பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் இன்மையைச் சாட்டாக வைத்து அதியுயர் சிறப்புத்தர லிகிதர்கள், மற்றும் உதவித் திட்டப் பணிப்பாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், நிர்வாகம் புனரமைப்பு என்று பதவிகள் வழங்கப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.



இந்நிலைமை மேலும் இக் கொடுப்பனவைச் சிக்கலாக்கிக் கொண்டது. கச்சேரியில் உள்ள உயர் அதிகாரிகள் கூறுவதை அப்படியே கொண்டு வந்து கிராம அலுவலர் மட்டத்தில் விளக்கம் இல்லாமலே திணித்தார்கள்.

சந்தேகம் கேட்டால் முழியைப் பிதுக்குகிறார்கள். அடுத்துக் கேட்டு வருவதாகக் கூறியபோதிலும் அடுத்த கூட்டத்தில் விளக்கம் எதுவும் சொல்வதில்லை.

இந்நிலைமை காரணமாக பொதுமக்களிடம் பலதடவைகள் ஏறக்குறைய ஆறு முதல் எட்டுத் தடவைகள் மாறிமாறிக் கையொப்பம் பெறப்பட்டது. ஆனால் இதற்கு நடந்தது ஒன்றும் இல்லை.

அடுத்த கட்டமாக இவை யாவும் ரத்துச் செய்யப்பட்டன. மீண்டும் கிராமிய புனர்வாழ்வுக்குழு அமைக்கப்பட்டு அவர்களின் பெயரில் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். கிராம அலுவலர்களுக்கு இதில் எந்தப் பொறுப்பும் இல்லை என அறிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவில் இருந்தும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு குழு அமைக்கப்பட்டு சிபார்சுகள் பெறப்பட்டு அனுப்பப்பட்டன. மீண்டும் கிராம அலுவலர்கள் கையொப்பமிட வேண்டும் எனத் திருப்பி அனுப்பப்பட்டது.

அடுத்து அனுப்பப்பட்ட பட்டியல் அரச உத்தியோகத்தர்கள் இக் குழுவில் இருக்க முடியாது. அவர்களை நீக்கிப் புதியவர்களை நியமித்துப் பணக் கொடுப்பனவுக்குக் கிராம அலுவலருடன் சிபார்சு செய்ய வேண்டும் என அனுப்பப்பட்டு மீண்டும் வேலைகள் தற்போது இடம்பெறுகின்றது.

இக்கொடுப்பனவிலும் கூட 2002 ஆம் ஆண்டின் பின்னர் குடும்பத்தில் யாராவது வெளிநாடு சென்றிருந்தால் இக்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என யாழ்.செயலகத்திலிருந்து வரும் உத்தியோகத்தர்கள் மக்களுக்கு அறிவிப்பதுடன், இத்தகையவர்கள் யாராவது கையொப்பமிட்டால் அப்பட்டியலே நீக்கப்படும் எனக் கூறி மீண்டும் புதிய இழுத்தடிப்புக்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளது.

பத்திரிகைகளில், மீள்கொடுப்பனவு துரிதப்படுத்தப்படுகின்றது என்று உயர் அதிகாரிகளின் தம்பட்டத்திற்கு அளவில்லை. ஆனால் மக்களுக்கு எவ்வளவு தூரம் இக்கொடுப்பனவு கிடைக்கின்றது என்பதே உண்மையான கேள்வியாகும்.

இதேநேரம் சில மாதங்களுக்கு முன்னர் யாழ்.செயலக உத்தியோகத்தர்கள் சிலர் அரியாலைப் பகுதியில் காணி உரிமை .சொந்தம், கோயில் காணி என்ற எதுவும் இல்லாமல் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவிற்கு கையயொப்பம் பெற்றுச் சென்றபின் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன என்பதுவும் சுட்டிக்காட்ட வேண்டியதாகும்.

-தென்றல்-

## கால்நடை பண்ணையாளரை ஊக்குவிக்க நடவடிக்கை

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கால்நடை வைத்தியர் பிரிவிலும் ஆடு,மாடு, கோழி என வளர்க்கும் சிறந்த பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பணப் பரிசில்களும் பெறுமதி மிக்க சான்றிதழ்களும் வழங் கப்படவுள்ளது.

எனவே மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் பண்ணையாளர்கள் தங்கள் பிரிவில் உள்ள கால்நடைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து போட்டியில் பங்குபற்றிப் பரிசில்களை வெற்றி கொள்ளுமாறு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் கேட்டுக்கொள்கின்றது. (05)

## பொருண்மியச் செய்திகள் வெளிவந்துள்ளது

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொருண்மியச் செய்திகள் ஆகஸ்ட், செப்ரெம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது.

மேற்படி இரு மாத இதழில், கிராமிய அபிவிருத்தி வங்கி அறிமுகப்படுத்தியுள்ள புலம்பெயர்ந்தோர் தாயக அபிவிருத்திக் கணக்கு என்ற தலைப்புச் செய்தியுடன் வி.பி.கரன் எழுதிய விவசாயச் செய்கை மூலம் நிலத்தை வளமாக்கவும் செய்யலாம், வளமிழக்கவும் செய்யலாம். பா.சுகிர்தம் எழுதிய மருதமடுக்குளம் புனரமைப்பின் அவசியம் நேர்காணல் மற்றும் சின்னஞ்சிறு விவசாய, விலங்கு வேளாண்மைச் செய்திகளுடன் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## கோழிக்குஞ்சு வழங்கல்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் தேவிபுரம் கிராமத்திலிருந்து பத்துப் பயனாளிகள் தெரிந்தெடுக்கப்பட்டு, தலா பத்துக் கோழிக்குஞ்சுகள் வீதம் ஒரு மாத வளர்ச்சியுடைய கோழிக்குஞ்சுகள், முல்லைத்தீவுக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் அண்மையில் வழங்கப்பட்டது. (26)

## குடாநாட்டு மக்களுக்கு குடிநீர் வழுங்க உலக வங்கி 40 கோடி நிதியுதவி

குடாநாட்டு மக்களுக்குச் சுத்தமான குடிநீரை வழங்க 40 கோடி ரூபா செலவில் பாரிய நீர் விநியோகத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு உலகவங்கி நிதியுதவி செய்யவிருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் பத்மநாதன் தெரிவித் துள்ளார்.

மிகையான இரசாயன உரப் பாவனை, மலசல கிடங்குகளிலிருந்து வெளிவரும் கழிவு என்பவற்றால் நிலக் கீழ் நீர் மாசடைந்துள்ளதாக சமீபத்திய ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இதனால் கிணறுகளிலிருந்து நீரைப்பெற முடியாதுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனை அடுத்துத் துரிதமாக இத்திட்டத்தை அமுல் செய்வது குறித்துக் கவனம் செலுத் தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீருடையை பெற்றுக்கொள்ள உடன் விண்ணப்பிக்கவும்

(அலுவலக செய்தியாளர்)

பாடசாலை மாணவர்களின் சீருடைக்கான விண்ணப்பங்களை இதுவரை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்காதவர்கள் உடன் அதற்கான விண்ணப்பப் படிவங்களை கி.சே. அலுவலர்களிடம் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கும் வண்ணம் கிளி.கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் வேண்டுகை விடுத்துள்ளார்.

2004.ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 30.08.2003 எனவும் அதற்குப் பின்பாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதெனவும்,

பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் இவ்விடயத்தில் முக்கிய கவனம் மேற்கொண்டு சீருடை விண்ணப்பங்களை விண்ணப்பிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பதாக கி.சே.அலுவலர்களிடம் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து கையளிக்கும் வண்ணம் வேண்டியுள்ளார். (சோ)

## ஆங்கில ஆசிரியர் செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் வலய ஆங்கில ஆசிரியர்களுக்கான இருநாள் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இன்றும் நாளையும் மு/மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணி முதல் மேற்படி செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும், ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.பரந்தாமன் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

## சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிசார் மீது கடும் நடவடிக்கை

### — சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா தெரிவித்தார்.

பொதுமக்களிடமிருந்து வரும் இவ்வாறான முறைப் பாடுகள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிராந்தியத்தின் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். அண்மையில் ரபுகஸ்கந்தை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் சிலர் இரண்டு யுவதிகளை மயானம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை குறித்து விசேட கவனம் செலுத்தி வருவதாகவும், அது தொடர்பான அறிக்கை ஒன்றை பொலிஸ் மா அதிபர் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் திணைக்களத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் ஒழுங்கீனமாக நடக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

## மாதிரி முன்பள்ளி விரைவில் திறப்பு

நெடுங்கேணிப் பிரதேசத்தில் மாதிரி முன்பள்ளியொன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையில் புதிதாக 'மணிமாறன்' மாதிரி முன்பள்ளி அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

### -முஸ்லிம் ஒருவரைக் கொலைசெய்து-

## தமிழ்ப் பிரதேசத்தில் உடலைப் போட்ட இராணுவக் கப்டனுக்கு விளக்கமறியல்

முஸ்லிம் குடும்பஸ்தர் ஒருவரைக் கொலை செய்து தமிழ்ப் பிரதேசத்தில் அவரது சடலத்தைப் போட்ட சம்பவம் ஒன்று தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவக் கப்டன் ஒருவரின் விளக்கமறியல் உத்தரவை அடுத்த மாதம் 9 ஆம் திகதிவரை நீடிக்குமாறு நீதவான் அட்மீர் உத்தரவிட்டுள்ளார். மட்டக்களப்பு ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்த குசைன் என்ற குடும்பஸ்தரைக் கொலைசெய்து தலை வெட்டப்பட்ட நிலையில் சடலமாக வீசியெறிந்த சம்பவம் தொடர்பாக இராணுவக் கப்டன் நுவார் கச்சீர் முச்சக்கரவண்டிச் சாரதி சிவாலுக் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

செவ்வாய் காலை, இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை விளக்கமறியல் உத்தரவை நீதவான் நீடித்தார். அத்துடன் இறந்தவரின் தொலைபேசிக்கு ஒருமாத காலத்துக்குள் உள்வந்த வெளிச்சென்ற அழைப்புக்கள் தொடர்பான விபரங்களை வெளியிடுமாறு சிறிலங்கா ரெலிக்கோம் நிறுவனத்துக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஏ-9 வீதியில் வேகக் கட்டுப்பாட்டை மீறும் சாரதிகளால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்!

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்ட வைத்திய சாலைக்கு முன்னால் உள்ள ஏ-9 வீதியில் வேகக் கட்டுப்பாட்டையும் மீறி வாகனங்கள் செல்வதன் காரணத்தினால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் முதல் வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் வரை பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் வரை உணவுப் பொருட்கள் பெறுவதற்கு மற்றும் தேநீர்ச்சாலைகளுக்கு ஏ-9 வீதியைக் கடந்தே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ஏ-9 வீதியில் மக்கள் நடைபாதையை குறிக்கும் மஞ்சள் கோடு அடிக்கப்பட்டிருந்தும் அதனூடாக மக்கள் வீதியினைக் கடக்கும் பொழுதும், வீதியால் வரும் வாகனங்கள் தாமதிக்காது வேகமாக வருவதன் காரணத்தினால் மக்கள் பெரிதும் விசனம் அடைந்துள்ளனர்.

காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் வேகக் கட்டுப்பாட்டு நடவடிக்கையினைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்ற பொழுதிலும் வாகன ஓட்டிகள் அதனை மீறி நடப்பதன் விளைவாக இப்பகுதியில் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முஸ்லிம்களை பொலிசில் இணைக்கும் திட்டத்தில் எதுவிதமாற்றமும் இல்லை

## ரணிலுடனான சந்திப்பின் பின் மு.கா.அறிக்கை

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் சேவைக்கு முஸ்லிம் இளைஞர்களைத் திரட்டுவதற்கான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளதாக துறைமுக அபிவிருத்தி கப்பல் துறை அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான றவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் பிரதமரைச் சந்தித்து கிழக்கு மாகாணப் பாதுகாப்புத் தொடர்பாகப் பேச்சு நடத்திய போதே பிரதமர் இதனைக்குறிப்பிட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதேவேளை தமிழப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக ஏதாவது யோசனைகளை முன்வைத்தால் அவை குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்றும் பிரதமர் கூறியதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(25)

# மண்டைதீவு வைத்தியசாலை இயங்க கடற்படை தொடர்ந்து முட்டுக் கட்டை

## - மீள்குடியேறிய மக்கள் பெரும் அவலம்

மண்டைதீவு வைத்தியசாலை இயங்காதிருப்பதனால் இப்பகுதியில் மீளக் குடியேறிய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

கடந்த 12 ஆண்டு காலமாக படையினரின் வசமிருந்த இவ் வைத்தியசாலைக் கூரைகள் அகற்றப்பட்ட நிலையிலுள்ளதுடன், வைத்தியசாலைத் தளபாடங்கள் களவாடப்பட்டும், வைத்திய சாலையைச் சூழ முட்பற்றைக் காடுகள் வளர்ந்த நிலையில் உள்ளது.

தற்போதைய சமாதான நிலையை அடுத்து இப்பகுதியில் மீண்டும் மக்களை மீளக்குடியமர அனுமதித்த நிலையில் இப் பகுதிகளில் 200 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் இப்பகுதியில் ஒரு வைத்தியசாலை கூட இல்லாதினால் இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்ரப்படுகிறார்கள்.

மீளக்குடியேறிய .இந்த மக்கள் தமக்குத் தேவையான வைத்திய சேவைக்காக யாழ்ப்பாணம் அல்லது ஊர்காவற்றுறைக்கு வரவேண்டியுள்ளமையும் இதற்காகப் பயன்படுத்தும் வீதிகள் மக்கள் பாவனைக்குப் பயன்படுத்த முடியாதளவு சேதமடைந் துள்ள மையும், இவ்வைத் தியசாலையைப் புனரமைக்க யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினர்கள் எடுத்த முயற்சிகளைச் சிறிலங்காப் படையினர் புறக்கணித்துள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது. (33)

# முச்சக்கர வண்டியையும் சாரதியையும் காணவில்லை!

## -மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையீடு

முச்சக்கர வண்டியையும் அதன் சாரதியையும் இரண்டு நாட்களாக காணாததினால் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவினிடம் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

சா. ஜெயக்கொடி (வயது-32) என்பவர் கடந்த 24 ஆம் திகதியிலிருந்து காணாமற் போயுள்ளார்.

இதனைச் சுட்டிக்காட்டி இவரது குடும்பத்தார் மனித உரிமை ஆணைக்குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இம் முறைப்பாட்டில், சம்பவ தினத்தன்று காலை 9மணிக்குப் புறப்பட்டுச் சென்ற அவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் இவர் தனது முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தும் இடத்திற்கருகில் ஓர் இராணுவ மினி முகாம் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (33)

# மட்டு. மக்கள் எழுச்சி சங்கமம் சிறப்புற நடந்த நிகழ்வுகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவந்த மக்கள் எழுச்சி சங்கமம் நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த திங்களன்று இடம்பெற்றது.

புலிகளின் புளியந்தீவுக் கோட்டம் நடாத்திய இந்நிகழ்வு மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் இடம் பெற்றது.

இதில் புலிகளின் பிரதிநிதிகளும் அரசாங்க நிர்வாகப்பிரிவுகளும் கடந்த நான்கு தினங்களாக மக்களுடன். இணைந்து அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து பிரச்சினைக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மௌன குருசாமி, மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இறுதி நிகழ்வில் மட்டு,அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்ஜனும் கலந்துகொண்டார்.

# உந்துருளி ஈருருளி மோதல் இரு ஓட்டிகளும் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

உந்துருளியும், ஈருருளியும் மோதிக் கொண்டதில் வாகனங்களின் ஓட்டிகள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பகல் பரந்தன்-முல்லை பிரதான வீதியில் முரசுமோட்டை 2ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் உந்துருளியும், ஈருருளியும் பலத்த சேதத்திற்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## மன்றவாணனின் 11 ஆம் ஆண்டு நினைவில்



தாயின் மடியில் 1972 03 11

தாயக மண்ணில் 1992 08 28

### லெப்டினன் மன்றவாணன்

**கதிர்காமவேலன் சிறிகாந்தன்**

(மீசாலை வடக்கு,வேம்பிராய்,கொடிகாமம்)

மண்ணுக்காய் மரணித்த மாபெரும் தியாகியே
உன் மறைவினால் எண்ணற்ற
பெருமையுண்டு -எம் தரணியிலே
நீர் மறைந்து பதினொரு
ஆண்டுகள் சென்றாலும்
காயவில்லை எங்கள் நெஞ்சத்தின் காயமது.

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

முகவரி:-
இல-04,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(3665) குடும்பத்தினர்.


# கால்நடை வைத்தியசேவை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகமும், துணுக்காய் பிரதேச கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் இணைந்து நடாத்தி வரும், கால்நடை இடம்பெயர் சேவையில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 08.08.2003 ல் இருந்து 10.08.2003 வரையான காலப்பகுதியில் 500 பசுக்களுக்கும், 70 எருமைகளுக்கும் தொண்டை அடைப்பான் தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டச் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்படுகின்றது. (26)

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற் பகல்10.00 மணிக்கு யாழ் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் எ.சிறிகுமரன் கேட்டுள்ளார்.


## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு 25-07-1924

உதிர்வு 09-09-2002

அமரர்

### கதிரவேலு சபாபதி

[ஓய்வு பெற்ற ஆசிரியர் யாழ்/சிறுப்பிட்டி]

திதி- 29.08.2003 துதியை

எங்கள் குல தெய்வமே!
பாசம் நிறைந்த அப்பாவே!
பாசத்தின் உறைவிடமே
கடமைமிகு தலைவனாய்
பரிவும் பாசமும் காட்டி
எங்களை மிளிர வைத்த அப்பாவே!
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட எங்கள் இதய தெய்வமே!
நீங்கள் எங்களைப் பிரிந்து ஓராண்டானாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு
என்றென்றும் அகலாது அப்பாவே.

நாளை(29.08.2003) வெள்ளிக்கிழமை மதியம் நடைபெறுகின்ற நினைவு நிகழ்விலும் 'அதனைத்தொடர்ந்து நடைபெறுகின்ற மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:-
48/1 விசுவமடு கிழக்கு,
விசுவமடு.

(3671) குடும்பத்தினர்.



## யூனிசெவ் நிறுவன அனுசரணையின் கீழ் நடைபெறும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்டப் பதிவக நடமாடும் செயலக அமர்வு

வன்னி , யுனிசெவ் நிறுவன அனுசரணையின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின், மாவட்டப் பதிவகத்தின், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலரது பிரிவுக்கான நடமாடும் செயலக அமர்வு எதிர்வரும் 01.09.2003 ம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி முன்னரங்கிலும், 02-09-2003 ம் திகதி அளம்பில் புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்திலும், 03-09-2003 ம் திகதி முல்லைதீவு நகரப் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலரது அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

இவ் அமர்வுகளின் போது இம் மாவட்டத்தின் மக்களது இதுவரை காலமும் பதியப்படாத பிறப்பு, இறப்பு பதிவு செய்தலும், பதிவு செய்யப்படாத திருமணங்கள் பதிவு செய்தலும் நடைபெறவுள்ளது என்பதை மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேலதிக மாவட்டப் பதிவாளர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-8262)



## சிந்தனைக்கு

இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக் கொடுத்ததில்லை. கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-08-2003

# யுத்த நிறுத்த மீறலும் கூட!

வவுனியாவில் பொங்குதமிழ் நிகழ்வின் ஏற்பாட்டிற்கான கருத்தரங்கில் கலந்து கொண்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்களைக் கோரி வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதி அரச அதிபருக்கும், வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்திற்கு பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் தமது பலத்த ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளதோடு, இது ஒரு மனித உரிமை மீறல் எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

பொங்குதமிழ் நிகழ்வானது விடுதலைப்புலிகளின் அரசியல் நிகழ்வு என்பதும் இதில் அரச ஊழியர்கள் கலந்து கொள்வதானது சட்டத்திற்கு மாறானது, இது குறித்து விபரம் கோரும் உரிமை இராணுவத்திற்கு உண்டு என்பதுமே வன்னிப்பிராந்திய இராணுவத் தளபதியின் நிலைப்பாடாகும்.

ஆனால், இவ் இராணுவத் தளபதியின் இந்நிலைப்பாடானது தமிழர்களின் உரிமைகளை மீறுவது மட்டுமல்ல, அவர்களை மிரட்டுவதாகவும், ஒரு யுத்தநிறுத்த மீறலாகவும் கொள்ளத்தக்கதாகும். மேலும் இந் நடவடிக்கை இவ் இராணுவத் தளபதியின் தற்துணிவான முடிவா என்ற கேள்வியும் கூட உள்ளது.

முதலில் இந்நிகழ்வானது விடுதலைப்புலிகளினால் ஏற்பாடு செய்யப்படுவதோ அன்றி விடுதலைப்புலிகளின் கொள்கை பரப்பும் நிகழ்வோ அல்ல. பொங்குதமிழ் நிகழ்வு ஏற்பாட்டாளர் என்னும் ஒரு குழுவே இதனை ஏற்பாடு செய்து வருகின்றது. அத்தோடு, இந்நிகழ்வானது தமிழ்மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றதே ஒழிய விடுதலைப்புலிகளின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது என்பதல்ல. ஆனால், பொங்குதமிழ் நிகழ்வுகளில் வெளிப்படும் உணர்வுகளும் – அதாவது தமிழ்மக்களின் உணர்வுகளும்– விடுதலைப்புலிகளின் உணர்வுகளும் ஒன்றாக இருப்பது தவறாக மாட்டாது. அத்தோடு தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு வேறுபட்டதாகப் புலிகளின் உணர்வுகள் இருக்க முடியாது என்பது வேறு விடயம்.

ஆனால், இதனைக் காரணங்காட்டி, பொங்குதமிழ் நிகழ்வைப் புலிகளே ஏற்பாடு செய்கின்றனர், நடத்துகின்றனர் இது விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கை எனக் கூறுவது தவறானதாகும். அத்தோடு இதில் பங்குகொள்ள முனையும் தமிழ்மக்களை மிரட்டும் தொனியில் நடவடிக்கைகள் மேற்கொள்வது அவர்களின் அரசியல் உரிமைகளை மீறும் செயலாகும்.

தமிழ்மக்களைப் பொறுத்து – அவர்கள் அரச ஊழியர்களாக இருப்பினும் சரி தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தும் உரிமை பெற்றவர்களாகும். அவர்களின் இந்நடவடிக்கையினைத் தடுக்கமுனைவது அவர்களின் அடிப்படை உரிமைகளை அடக்கி ஒடுக்க முற்படும் செயலாகும். தென்னிலங்கையில் தமிழ்மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வழங்கக்கூடாது என ஜே.வி.பி. நடாத்தும் போராட்டத்திற்கு தடைவிதிக்க முடியாமலோ அன்றி விரும்பாமலோ அரசாங்கம் இருக்கையில் தமிழ் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொள்பவர்களை மிரட்ட முயல்வது எந்தவகையில் ஏற்றுக் கொள்ளத்தக்கது. நியாயப்படுத்தக்கூடியது.

அதுமட்டுமல்ல, இப் பொங்குதமிழ் நிகழ்வானது வவுனியாவில் தான் முதன்முதலாக ஏற்பாடு செய்யப்படும் ஒன்றல்ல. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் மாவட்ட ரீதியாக ஏற்கனவே இந்நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது. இறுதியாக யாழ். குடாநாட்டில் இந்நிகழ்வு பெரும் உணர்வெழுச்சியுடன் தமிழ்மக்களினால் நடத்தி முடிக்கப்பட்டது. அவ்வேளையிலும் இராணுவத் தரப்பின் அழுத்தங்கள் இருக்கவே செய்தன. ஆயினும் தனிப்பட்ட ரீதியில் மிரட்டும் தொனியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

ஆனால், வன்னிப் பிராந்திய இராணுவத்தளபதியின் நடவடிக்கையானது மிரட்டும் தொனியிலானதாகும். இதனால், வவுனியா மாவட்ட அரச அதிபர் கூடக் குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளதாகவே தெரிகின்றது. இதன் காரணமாகவே தமது அமைச்சிற்கு எத்தகைய பதில் அளிப்பது என விளக்கம் கோரி இருதரப்பினரதும் நிலைப்பாட்டை விளக்கிக் கடிதம் எழுதியுள்ளார்.

சரி, வவுனியா மாவட்ட இராணுவத்தளபதி குறிப்பிடுவது போன்று, இந்நிகழ்வானது விடுதலைப்புலிகளினால் ஏற்பாடு செய்யப்படுவதாக வைத்துக்கொண்டாலும் கூட, இந்நிகழ்வில் கலந்து கொள்பவர்களின் விபரங்களையும், அதற்கான விளக்கத்தையும் கோருவது எந்த வகையில் சரியானதாக அமையமுடியும். ஏனெனில், விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாட்டில் அரச உத்தியோகத்தர்கள் பங்கேற்கக் கூடாது என ஏதாவது தடையுத்தரவுகள் உண்டா?

யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்குப் புலிகளுக்கு உரிமை உண்டு. அதேவேளை, அரச ஊழியர்களுக்கும் தாம் விரும்பும் அரசியல் சக்திகளைத் தேர்ந்தெடுக்க சனநாயக ரீதியில் உரிமையுண்டு. இந்நிலையில், விடுதலைப்புலிகள் வவுனியாவில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ அன்றி அரச ஊழியர்கள் அதில் பங்கேற்பதோ எவ்வாறு தவறாக இருக்க முடியும்.

ஆகையினால், வவுனியா மாவட்ட இராணுவத்தளபதியின் இந் நடவடிக்கையானது அரச ஊழியர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல்மட்டுமல்ல, யுத்தநிறுத்த உடன்பாட்டு மீறலும்கூட. இத்தகைய வழிமுறையை முன்னரும் வேறு சில நடவடிக்கைகளின் போதும் வவுனியா இராணுவத்தளபதி மேற்கொள்ள முற்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். ஆனால், இவ் இராணுவத் தளபதியின் போக்கு இவர்கள் இன்னமும் தமிழ்மக்களின் உரிமைகளை மதித்து நடக்கத் தயாராகவில்லை என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

ஆகையினால், இவ்விடயத்தில் கண்காணிப்புக்குழு தலையீடு செய்து உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தமிழ்மக்களின் உரிமைகளை மீறும் செயல்களைத் தடுத்து நிறுத்துதல் வேண்டும். இதுவே சமாதான முயற்சிகளையும் தமிழர்களின் சனநாயக உரிமைகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளாக இருக்க முடியும்.

# சமாதான முயற்சியால் கிடைத்த உதவியில் ரூ.1800 கோடி தென்பகுதிக்கு செலவிடப்படும்

## -அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சியின் பலனாகக் கிடைத்த உதவியில் 1800 கோடி ரூபாவை தெற்கில் அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடப்படவுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி, மின்சார விநியோகம் போன்றவற்றிற்கு இதனை செலவிட அரசு திட்டமிட்டுள்ளது.

பாரிசில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புலிகளின் உள்ளக மாநாடு இன்னும் இரண்டு தினங்களுக்குள் முடிவடைந்துவிடும். அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் பதிலை நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம் அதனைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதனைத் தொடர்ந்துதான் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி சம்பந்தமான முடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார்.

தெற்கில் இவ்வாறு அபிவிருத்தித்திட்டங்களை அரசு முன்னெடுக்க முற்பட்டதற்கு அரசியல் காரணங்கள் முக்கியம் பெறுகின்றன. தெற்கில் ஜே.வி.பி. சமாதான முயற்சிகளுக்கெதிரான ஊர்வலங்களை நடத்திவருகிறது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். இதனால் அரசு சமாதான முயற்சியைப் பலப்படுத்தவும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும், விலைவாசிகளைக்குறைக்க முடியும் என்பதைக் காட்டுவதற்காகவும் மறுபக்கத்தில் மாகாணசபைத் தேர்தல்கள் குறுகிய காலத்தில் நடைபெறலாம் என்பதால் அதிலும் தனது நிலைப்பாட்டை வலுப்படுத்தும் நோக்கிலேயே அரசு திடீரெனத் தெற்கில் பாரிய அபிவிருத்தித்திட்டங்களை செயற்படுத்த எண்ணியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க வழங்கப்பட்ட கால அவகாசத்தால் பயனில்லை

## உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க அரசாங்கம் வழங்கியிருந்த பொதுமன்னிப்புக் காலத்தில் எதுவித பயனும் கிட்டவில்லை என உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார். இதற்கென வழங்கப்பட்டிருந்த காலத்தில் எந்த வித ஆயுதங்களும் ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் தாம் எதிர்நோக்கும் பிரதான சிக்கல் சட்டவிரோத ஆயுதங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து விலகிச் சென்ற பெரும் எண்ணிக்கையிலானோர் நாடு முழுவதும் இருப்பதாகவும், இவர்கள் வசம் பல்வேறு ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். கொழும்பில் நடந்த வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தில் அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

# நாட்டைத் தாரைவார்க்க முயற்சிக்கும் இந்த அரசை தனித்து நின்று வீழ்த்துவோம்

## -ஜே.வி.பி. மார்தட்டுகிறது

"இடைக்கால நிர்வாகத்திலிருந்து எமது புனித பூமியை மீட்டெடுக்கும் காலம் வந்துள்ளது. இந்நிலையில் சிலர் சோதிடம் பார்க்கின்றனர், தருணம் பார்க்கின்றனர். வேறு சிலர் தமது தலைக்கு எப்போது முடி சூட்டப்படும் என எதிர்பார்த்துள்ளனர். எவ்வாறாயினும் நாம் தனித்து நின்றாவது இந்த அரசாங்கத்தை வீழ்த்துவோம்" என ஜே.வி.பி. பிரதம செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி காலியில் நடைபெற்ற அரசுக்கெதிரான பாத யாத்திரையின் ஆரம்பத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் அங்கு குறிப்பிடுகையில்; இதற்கு முன்பு கலிங்க மாகன் இந்நாட்டை ஆக்கிரமித்து ஆட்சி நடத்தியதை குறிப்பிட்ட அவர் இவ்வாறான நிலை தற்போது ஏற்படாவண்ணம் தென்பகுதி மக்கள் போராடி வந்துள்ளதாகவும் தற்போதும் இந்நாடு முகங்கொடுத்துள்ள அழிவுகளிலிருந்து மீட்டெடுக்கவே இப் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டைத் தாரைவார்க்கும் இவ்வரசாங்கத்தின் நீண்டகால செயற்திட்டத்தை முறியடிப்பது எமது கட்சியின் கடமையாகும். தேர்தலுக்கு முன்பாகவே புலிகளுடன் கூட்டுச் சேர்ந்து திருட்டு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு ஏற்பாடு செய்தது நாட்டின் மூன்றில் ஒரு பகுதியையும் கடற் பிரதேசத்தில் 60 வீதத்தையும் இவ்வரசு புலிகளிடம் ஒப்படைக்க முயற்சிக்கின்றது. அதனைத் தடுக்க நாம் முன்வர வேண்டும்.

புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னும் பல மீறல்களைச் செய்கின்றனர். அரசு இதனை கவனிக்காமல் மௌனம் சாதிக்கின்றது. இந்த அரசு புலிகளுக்கு "வெற்றி" ஒன்றை வழங்கியுள்ளது அவர்கள் கொழும்பு, மட்டக்களப்பு மட்டுமன்றி பாரிசுக்கும் செல்கின்றார்கள்.

யார் முன்வராவிட்டாலும் எமது கட்சி தனியாக நின்றேனும் இவற்றை முறியடிக்கும் என்றார்.

# நியூசிலாந்தை வெல்வது இலகுவானதல்ல!

## – இந்திய அணித் தலைவர் கங்குலி

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணியினரை வீழ்த்துவது சுலபமான காரியமல்ல என்று இந்திய அணித் தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த கங்குலி, நியூசிலாந்து அணியினர் மிகச் சிறப்பாக விளையாடி வருவதாகக் கூறியுள்ளார்.

அது மட்டுமன்றி சமீபத்தில் அந்த அணி சிறிலங்கா அணியினரை வீழ்த்தியதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணி, இரண்டு டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

# சர்வதேச போட்டிகளிலிருந்து பீற்சாம்ராஸ் ஓய்வு


உலக டென்னிஸ் அரங்கில் பல வருடங்களாக வெற்றி வீரராக வலம் வந்த அமெரிக்காவின் பீற் சாம்ராஸ் சர்வ தேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 15 வருடங்களாக சர்வதேச டென்னிஸ் உலகில் தனக்கென ஓரிடத்தைப் பிடித்திருந்தவர் பீற் சாம்ராஸ் தனது 19ஆவது வயதில் நியூயோர்க்கில் நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் முதல் கிராண்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இதே நியூயோர்க் நகரில் தற்போது அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் தொடங்கியுள்ள வேளையில் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்த அவர், சர்வதேசப் போட்டிகளிலிருந்து தாம் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

தொடர்ந்து பல வருடங்களாக உலகின் முதனிலை வீரர் எனும் பெருமை பெற்றிருந்த சாம்ராஸ் இதுவரை 14 ஒற்றையர் கிராண்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

ஆனால் இதுவரை பிரன்ஸ் ஓப்பன் டென்னிஸில் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# 191 ஓட்டங்களால் வெற்றி

ஹெடிங்லேயில் நடைபெற்ற இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் 4வது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இங்கிலாந்தை 191 ஓட்டங்களால் வென்றது.

வெற்றிபெற 401 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி ஆடத்தொடங்கிய இங்கிலாந்து அணி தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் ஜக்கலீஸின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 209 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

5 போட்டிகளைக் கொண்ட தொடரில் தென்னாபிரிக்கா 2-1 என்ற நிலையில் முன்னணியிலுள்ளது.

இறுதிப்போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

- கிழக்கில் பொலீஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பு விவகாரம் -

# த.தே. கூட்டமைப்பின் நிலைப்பாட்டிற்கு சிறி. முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று பிற்பகல் அலரி மாளிகையில் இடம் பெற்ற இச்சந்திப்பில் கிழக்குமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாகவும்கிழக்கு நிலைமை தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இத்தகைய செயற்பாடு தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவை மேலும் மோசமடையச் செய்யவே வழிவகுக்கும் என்றும் கூறியுள்ளார்.

த.தே.கூட்டமைப்பினரின் இந்த நிலைப்பாட்டிற்கு சிறி.மு.காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இச்சந்திப்பில் எட்டப்பட்ட முடிவுகள் தொடர்பாக எதுவும் தெரியவரவில்லை. ஆனால் இச்சந்திப்புத் தொடர்பான செய்தியாளர் மாநாடு ஒன்றினை த.தே.கூட்டமைப்பினர் இன்று காலை கொழும்பு நிப்பொன் விடுதியில் நடத்தவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிரதமர், அமைசசரும் சிறி.மு.காங்கிரஸ் தலைவருமான ரவூப்ஹக்கீமுடனான சந்திப்பில் கிழக்கில் பொலிசாருக் கான ஆட்சேர்ப்பில் மாற்றமில்லை என தெரிவித்திருந்தும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றதும் தெரிந்ததே.

# வீதி ஒழுங்குகளை மீறும் பேருந்துகளை அரசுடமையாக்க அரசு தீர்மானம்

## விபத்துக்களைத் தடுக்க புதிய நடவடிக்கை

(கொழும்பு)

வீதி ஒழுங்குகளை மீறும் பயணிகள் பேருந்துகளை அரசுடைமையாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதேவேளை, ஒழுங்கை மீறும் சாரதிகளின் அனுமதிப்பத்திரங்கள் ரத்துச் செய்யப்படுமென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சட்டமா அதிபர் திணைக் களத்தில் விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

போக்குவரத்து பெருந்தெருக்கள், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திலக்மாரப்பன, சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து வீதி ஒழுங்குகளை மீறும் சாரதிகளுக்கு எதிரான தண்டனைகளை அதிகரிக்கவும், பேருந்து உரிமையாளர்களுக்குத் தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கிணங்க, ஒழுங்கை மீறி விபத்துக்குள்ளாகும் பேருந்துகளை அரசுடமையாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சனநெரிசலில் சிக்கி 40 பக்தர்கள் பலி மகாராஷ்டிரா கும்பத் திருவிழாவில் துயரம்

(புதுடில்லி)

இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற கும்பத் திருவிழாவின் போது சனநெரிசலில் நசியுண்டும், நீரில் மூழ்கியும் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதோடு 200 இற்குமதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலத்தின் நாசிக் என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்ட இத்திரு விழாவில் நீரில் மூழ்கியே பலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

சனநெரிசலால் ஆற்றுக்கருகில் கட்டப்பட்டிருந்த தடை உடைந்து பக்தர்கள் ஆற்றில் மூழ்கியுள்ளனர்.

### தமிழர்...

தளபதி கருணா அம்மான் தலைமையிலான அரசியல் குழுவினர் சந்தித்து உரையாடினார்கள். கூட்ட மண்டபத்தில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய பின்னர் தமிழ்ச்செல்வன் கருணா அம்மான் ஆகியோர் தலைமையிலான அணியின் மரியாதை விருந்துக்காக பிரான்சில் உள்ள நோர்வே தூதரகத்திற்குச் சென்று அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினர்.

### வடக்கு...

பிலைவ முஸ்லிம் மக்கள் உட்பட 2000 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அம்பாறை மாவட்ட வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

### புதுக்குடியி...

வமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறிபாலா தசிகரன் (5ஆம் வட்டாரம் இரணைப்பாலை) என்பவரே காயமடைந்தவராவர் இதுதொடர்பான விசாரணை முல்லைத்தீவு நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. (பா)

### எரிபொருள்...

இதனால் ஏற்கனவே கூட்டுத்தாபனத்திற்கு 16 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. என தெரிவித்த அவர் பெற்றோலியத் தயாரிப்பு பொருட்களிற்கான விலைகள் அதிகரிக்கப் படவேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

### பாதுகாப்பு....

அது மட்டுமன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை என்றும் சம்மேளனம் கூறியுள்ளது.

### இடைக்கால....

குண்டுவெடிப்புகள், அனர்த்தங்கள் இல்லாத சமாதானம் மலர வேண்டும் என்று முழு உலகமும் விரும்புவதாகவும் அவ்வாறான ஒரு தீர்வுக்காக இந்தியாவுடன் கலந்தாலோசிக்க இலங்கைஅரசு தயங்காது என்றும் கூறியுள்ளார்.

### கண்காணிப்பு...

நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று பிற்பகல் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான கரடியனாறுக்குச் செல்லும் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் தலைவர், சிறப்புத் தளபதி ரமேசை சந்தித்து ஒப்பந்த அமுலாக்கல் குறித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### காணாமல்...

ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும், இனிமேல் எடுக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கள் அதற்கு விடுதலைப்புலிகள் என்றும் உறுதுணையாக விளங்குவர் எனவும் உறுதியளித்தார்.

### யாழ்...

நலன்புரி முகாம் அமைந்துள்ள ஆதனம் தனியார் ஒருவருக்குச் சொந்தமானது என்பதால் அவர்களை அந்த ஆதனத்தை விட்டு எழும்புமாறு ஆதனச் சொந்தக்காரர் நிர்ப்பந்தித்துள்ளார். இந்த நிலைமையைச் சுட்டிக்காட்டிப் பல தொண்டு நிறுவனங்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் இது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையையும் எந்த அமைப்பும் செய்யாமை குறித்து இந்த அகதிகள் மிகவும் கவலையடைகின்றனர். (33)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி மாவட்டத்தின் சாரணிய வளர்ச்சியில் பெரும் சாதனைகளைப் படைத்தவரும் எமது மாவட்ட கௌரவ சாரண ஆணையாளரும், எமது ஆசானுமான திரு. மாபுவனேந்திரன் அவர்களுக்கு ஸ்பெயின் நாட்டின் றினிட்டி பல்கலைக்கழகத்தினால் சாரணிய சாதனைகளைப் பாராட்டி கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி கௌரவித்தமையினையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சனாதிபதி சாரணர்கள்,
கிளிநொச்சி மாவட்டம்.

(3678)

- இங்கிலாந்தில் வெற்றிக்கேடயம் தட்டிக்கொண்ட -

# தமிழீழ வலைபந்தாட்ட அணிக்கு பாராட்டு விழா நடத்த ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

இங்கிலாந்து நாட்டின் 2003ஆம் ஆண்டுக்கான தமிழர் விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு நடைபெற்ற அனைத்து வலைபந்தாட்டப் போட்டிகளிலும் மற்றும் இங்கிலாந்தில் வாழும் வெள்ளையர்களின் மாநில அணிகளுடனும் மோதி தொடர் வெற்றிகளைப்பெற்று வெற்றிக் கேடயத்தினைத் தனதாக்கிக்கொண்ட தமிழீழ வலைபந்தாட்ட அணியினருக்கான பாராட்டுவிழா நடாத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு கிளிநகரம் டிப்போச் சந்தியில் வைத்து தாயக அணிக்கு வரவேற்பு நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள், ஆர்வலர்கள் கலந்து தாயக அணியை வரவேற்கும் வண்ணம் தமிழீழ விளையாட்டுத்துறை, தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ கல்விக்கழகம் ஆகியன கூட்டாக வேண்டுகை விடுத்துள்ளன. (சோ)

# தேசிய பாடசாலை அதிபர் நேர்முகத் திகதிகள் அறிவிப்பு

தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கான நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் நடைபெறவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தில்லைநடராஜா தெரிவித்துள்ளார்.

இசுறுபாயவில் கல்வியமைச்சில் அடுத்தமாதம் 05,06,07,11,12,13, மற்றும் 19ஆம் திகதிகளில் இவ் நேர்முகப்பரீட்சை நடைபெறும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள 80 தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், இதற்கு 500 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் நேர்முகப்பரீட்சையின் போது சேவைக் காலம் கல்வித்தகைமை, விசேட தகைமை போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பப் பெண்மீது சிப்பாய் பாலியல் வல்லுறவிற்கு முயற்சி

இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முனைந்த சிறிலங்காக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் அப்பெண்ணால் விரட்டப்பட்ட சம்பவம் ஒன்று பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மேற்படி குடும்பப் பெண் வீட்டில் தனித்திருந்ததாகவும் குறித்த நேரம் கணவன் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுவிட்டதாகவும் தெரியவருகிறது. அவ்வேளை இரவு 10 மணியளவில் குறிப்பிட்ட சிப்பாய் அப்பெண்ணின் வீட்டினுள் புகுந்து படுக்கையில் இருந்த பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முற்பட்டுள்ளார்.

ஆயினும் நிலைமையை உணர்ந்து கொண்ட அப்பெண் படைச்சிப்பாயை மோசமாகத் தாக்கியுள்ளார். அப்பெண்ணின் தாக்குதலின் அகோரம் தாங்க முடியாத படைச்சிப்பாய் தப்பியோட முற்பட்டதாகவும் அவ்வேளை அருகிலிருந்த மண்டபம் ஒன்றில் தங்கியிருந்த இளைஞர்கள் சிலரிடம் பிடிபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அவ் விளைஞர்களாலும் தாக்கப்பட்ட சிப்பாய் அருகிலுள்ள காவலரண் ஒன்றினுள் ஓடி மறைந்துள்ளார். இதனைச் சுட்டிக்காட்டி அப்பகுதி மக்களால் 524 ஆவது பிரிகேட் படைத்தளபதிக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட அவர் பாதிக்கப்பட்ட பெண் மேற்படி இராணுவச் சிப்பாயை அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து குறிப்பிட்ட காவலரணில் இருந்த மூன்று இராணுவத்தினரையும் பொலிசார் கைது செய்துள்ளனர். (27)

## கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட மீளாய்வுக் குழுக்கூட்டம் நாளை 29 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கிளி. அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் பிப 2.30 மணிக்கு நெறிப்படுத்தல் குழுக் கூட்டமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளதனால் சம்பந்தப் பட்ட சகல அரச, அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகளை இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி. அரச அதிபர் வேண்டியுள்ளார். (சோ)

## கேள்வி அறிவித்தல்

2003.08.20ம் நாளிதழில் 2003 ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான நாட்டுப்புழுங்கல் அரிசி, கோதுமை மாவு என்பவற்றுக்கு கேள்விகள் கோரப்பெற்றன. தற்போது கோதுமை மாவிற்கான கேள்வியினை இரத்துச் செய்வதுடன், நாட்டுப் புழுங்கல் அரிசிக்கான கேள்வி பின்வருமாறு திருத்தம் செய்யப்படு கின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

01. கேள்விப் படிவம் வழங்கல் காலம்- 2003.08.30ம்நாள் வரைநீடிக்கப்பட்டுள்ளது.

02. கோரப்படும்அரிசியின் அளவு-

| காலம் | நாட்டுப் புழுங்கல் அரிசி |
|---|---|
| 2003 ஒக்ரோபர் | 775 மெ.தொன் |
| 2003 நவம்பர் | 775 மெ.தொன் |
| 2003 டிசம்பர் | 775 மெ.தொன் |

தி.இராசநாயகம்
அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்

(கி-8263)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.